2025 செப்டம்பர் மாதம் 10 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 12/2020

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 – நாகராஜ் |
| தகப்பனார் பெயர்: | பெரியகருப்பன் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 45 |

10.09.2025

( 1, 2 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

நான் தற்சமயம் தேனி அல்லிநகரம் கம்போஸ்ட் ஓடை தெருவில் வசித்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2019ம் வருடம் காலை சுமார் 6 மணியளவில் தேனி அல்லிநகரம் கம்போஸ்ட் ஓடை தெருவிலிருந்து இரண்டு ஆட்டோக்களில் சேடப்பட்டி அருகிலுள்ள பூசலப்புரத்திலுள்ள குலதெய்வ வழிபாடுக்காக புறப்பட்டு சென்றோம். சர்தார் என்பவர் ஓட்டிய ஆட்டோவில் நான், சுரேஷ், சுரேஷின் மனைவி பாண்டியம்மாள், முருகன், சென்றாயன் தம்பி சதீஷ்குமார் ஆகியோர்கள் ஒரு ஆட்டோவிலும், மற்றொரு ஆட்டோவை ராமு என்பவர் ஓட்டினார், மற்றொரு

ஆட்டோவில் பொன்னுத்தாய், சென்றாயன், சென்றாயன் மனைவி, சென்றாயன் மகள் ஆகியோர்கள் சென்றோம். சுமார் 6.40 மணிக்கு பிராதுக்காரன்பட்டி பிரிவில் உள்ள டீ கடையில் டீ அருந்துவதற்காக முருகன் என்பவர் ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோவிலிருந்து இறங்கி, நாங்கள் சென்ற சர்தார் ஆட்டோவில் ஏறினார். ராமு என்பவர் ஆட்டோ எங்களுக்கு முன்பாக சென்றது. பின்னால் சுமார் 20 அடி தூரத்தில் நாங்கள் பின்னால் சென்று கொண்டிருந்தோம். ஆண்டிபட்டியை தாண்டி கொண்டமநாயக்கன்பட்டி என்ற இடத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் சுமார் 7.20 மணியளவில் Golden Hardwares என்ற கடைக்கு அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த அரசு பேருந்தும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற ராமு என்பவர் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாக அருகிலிருந்தவர்கள் சொல்லி நான் கேள்விப்பட்டேன். அரசு பேருந்து ஏறி வந்து ஆட்டோவில் இடித்ததாக சொன்னார்கள். ராமு என்பவர் ஆட்டோவில் இருந்தவர்களில் ராமு காயத்தோடு இருந்தார், அந்த ஆட்டோவில் சென்ற மற்ற நபர்கள் சென்றாயன், சென்றாயன் மனைவி, சென்றாயன் மகன், மகள், பொன்னுத்தாய் ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு, பொன்னுத்தாய் மற்றும் ராமு ஆகியோர் மட்டும் உயிருடன் உள்ளார்கள், மற்ற நபர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். மேற்படி அரசு பேருந்தை நான் விசாரித்ததில் அமாவாசை மகன் கருப்பசாமி என்பவர் ஓட்டி வந்ததாக தெரிந்துக்கொண்டேன். ராமு மற்றும் பொன்னுத்தாய் ஆகியோரை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏற்றி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். முருகன் என்பவர் இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அன்றைய தேதியில் என்னை போலீசார் விசாரித்தார்கள், நடந்த விபரத்தை சொன்னேன்.

<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

சம்பவ இடத்திலிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவர்களை அனுப்பி வைத்துவிட்டு, நான் அவர்களின் பின்னால் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். முருகன்

காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றுவிட்டார் என்றால் இல்லை, எங்களுடன் தான் வந்தார், க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்து தான் முருகன் போலீசாரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரை எழுதிக் கொடுத்தாரா, வாக்குமூலமாக கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.10 16:45:52 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
10.09.2025